சங்க உறுப்பினர்களுக்கு மட்டும்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# செய்தி மடல்

வெளியீடு : 09 மாதம் : ஆனி ஆண்டு : 2010

கொழும்புத் தமிழ்ச் சங்க இணையத்தளத்தில் "எம்மைப் பற்றி" எனும் பகுதியிலுள்ள "செய்தி மடல்" என்பதன் பிரசுர வடிவம் இம்மடலாகும். மேலும் விபரங்களுக்கு எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

இணையத்தளம்:www.colombotamilsangam.com மின்னஞ்சல்: tamilsangamcolombo@yahoo.com
தொலைபேசி இல : 2363759 info@colombotamilsangam.com
தொலைநகல்: 2361381

## சிந்தனைத் திறன் வளர

சிந்தனைத்திறனை வளர்க்க மூன்று இணைப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

1. திட்டமிட்டுச் செயல்புரிதல் (Planned Work)
2. விழிப்பு நிலை (Awareness)
3. தற்சோதனை (Introspection)

இவற்றில், விளைவைக் கணித்து அதற்கு ஏற்ற அளவிலும், முறையிலும் மனம், மொழி, செயல்களைப் பயன்படுத்தலே திட்டமிட்டுச் செயல்புரிவதாகும்.

தேவை, பழக்கம், சூழ்நிலை இவற்றால் உணர்ச்சிவயப்படாது தன்னையும் தான் அடையவேண்டிய பயனையும் மறவாத விழிப்பு நிலையில் செயலாற்றும் திறன்தான் விழிப்பு நிலையாகும்.

ஒவ்வொரு செயல் முடிவிலும், விளைவைக் கணித்து, தான் செய்த முறை, அதில் விளைந்த தவறுகள் அல்லது நன்மைகள் இவற்றைச் சிந்தித்து உணர்வது; ஒவ்வொருநாளும் இரவு படுக்குமுன் அன்று தான் செய்த செயல்களனைத்தையும் நினைவிற்குக் கொண்டுவந்து தன் செயல்களைச் சோதிப்பது; செயலில் தவறு கண்டால் இனி அத்தவறு ஏற்படாத உறுதி கொள்வது; நலமாக இருந்தால் அந்த முறையை அழுத்தமாக மனத்தில் பதிவு செய்து கொள்வது: இவை அனைத்தும் இணைந்த முறையே அகத்தாய்வுச் செயலாகும்.

*- ஓர் அறிஞர் -*

## ஆனி மாதம் நடைபெற்ற சங்க நிகழ்வுகள்

### அறிவோர் ஒன்றுகூடல்

02.06.2010 அன்று நடைபெற்ற அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் **"நாகா பில்டர்ஸ்"** முகாமைத்துவ பணிப்பாளர் திரு.குணரத்தினம் செந்தீபன் B.Enq. MASME அவர்கள் **"மீள்கட்டமைக்கப்படக் கூடிய சக்தி மூலங்கள்"** என்னும் பொருள்பற்றி உரை யாற்றினார். கல்விக்குழுச் செயலாளர் திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்கள் நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரைஞர் பற்றிய சிறந்த அறிமுகவுரையை ஆற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். உரைஞர் தனது உரையில் எமது நாட்டில் கிடைக்கும் சக்தி மூலங்கள் பற்றி விரிவான செய்திகளைக் கூறி, இலகுவாகவும் அதிக செலவின்றியும் பெறக் கூடிய சக்தி மூலங்கள், மீள்கட்டமைக்கப்படக் கூடிய சக்திமூலங்கள் பற்றியும் சிறந்த உரையொன்றை ஆற்றினார்.

மீளமைக்கக் கூடிய சக்தி மூலங்கள் 60 வீதமானவை மீளப் பெறப்படுகின்றன. இலங்கையில் ஏறத்தாழ 94% மான சக்தி நீரின் மூலம் பெறப்படுகிறது. நிலக்கரி, உயிரியல் சக்திகள் காட்டு விறகு, விவசாய கழிவுகள் சேதன திண்மக் கழிவுகள் மூலமும், பாம் ஒயில் மரம் வளர்த்தல் மூலமும், சூரியகதிர், காற்று வலு என்பன இயற்கைச் சக்திகளாகவும் பெறப்படுகின்றன.

சில நாடுகள் எரிபொருள் ஏற்றுமதி மூலம் நாடுகளை அடிமைப்படுத்துகின்றன. இதற்கு விழிப்புணர்வு வேண்டும்.

### நூலகம் (சிறுவர் பகுதி)

02.06.2010 **"கதை கதையாம் காரியமாம்"** என்ற நிகழ்வில் செல்வி.எம்.சுபாஷினி கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

### அறிவோர் ஒன்றுகூடல்

09.06.2010 **"மெய்ப்பொருள் காண்பதறிவு"** என்னும் பொருள் பற்றி ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திருமதி.வயலற் சந்திரசேகரம் அவர்கள் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் உரையாற்றினார்.



அந்நிகழ்வுக்கு ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.க.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கினார். பேச்சாளர் பற்றி அறிமுகம் செய்து வைத்தார். பேச்சாளர் தனது உரையின் போது இடையிடையே பாடல்களையும் பாடி சபையினரை மகிழ் வூட்டினார். மெய்ப்பொருள் பற்றி ஆன்மீக ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் பல எடுகோள்களைக் கூறி தனது உரையை சிறப்பாக ஆற்றினார்.

### தமிழிசை மரபில்

11.06.2010 அன்று நடைபெற்ற "தமிழிசை மரபில்" நிகழ்வில் **"அருளாளர் திருஞானசம்பந்தர்"** பற்றிய உரையும் பாடல் களும் இடம்பெற்றன. சென்னை அடையாறு அரசினர் இசைக் கல்லூரி மாணவி செல்வி வைஷ்ணவி ஜெயச்சந்திர பைரவமூர்த்தி இந்நிகழ்வை சிறப்புற ஒழுங்கமைத்து வழங்கினார். இவருக்கு அணிசேர் கலைஞர்களாக வி.சுப்பிரமணியக்குருக்கள் (வயலின்), ஏ.ஜி.சுவாமிநாதன் சர்மா (மிருதங்கம்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.டபிள்யூ.எஸ்.செந்தில்நாதன் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியதோடு நன்றியுரையையும் வழங்கினார்.

### நூலகம் (சிறுவர் பகுதி)

12.06.2010 **"கதை கதையாம் காரியமாம்"** என்ற நிகழ்வில் திருமதி.ஈ.ஏ.ஜெசில்டா கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

### அறிவோர் ஒன்றுகூடல்

16.06.2010 அன்று அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் கொழும்புப் பல்கலைக்கழக சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.அ.சர்வேஸ்வரன் உரையாற்றினார். **"இலங்கையின் சுற்றாடற் சட்டம்: இயற்கை வளங்கள், அபிவிருத்தி, மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சி என்பவைகளின் பின்னணியிலான சில சிந்தனைகள்"** என்னும் பொருள்பற்றி பலரும் பாராட்டக் கூடிய தெளிவான உரையை ஆற்றினார். இந்நிகழ்வுக்கு துணைத் தலைவர் திரு.ஜி.இராஜகுலேந்திரா அவர்கள் தலைமை தாங்கினார்.

### இலக்கியக்களம்

18.06.2010 அன்று நடந்த இலக்கியக்களம் நிகழ்வில் கலாநிதி மகேந்திரராசா பிரவீணன் அவர்கள் உரையாற்றினார். தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திருமதி வசந்தி தயாபரன் தலைமையேற்று கலாநிதி மகேந்திரராசா பிரவீணன் அவர்கள் பற்றிய நல்ல அறிமுகவுரையை ஆற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். **"காலமும் கவிதையும்"** என்னும் பொருளில் சிறப்பாக உரையை ஆற்றி பேச்சாளர் சபை யோரின் பாராட்டையும் பெற்றுக்கொண்டார்.

### நூலகம் (சிறுவர் பகுதி)

19.06.2010 **"கதை கதையாம் காரியமாம்"** என்ற நிகழ்வில் திருமதி வயலற் சந்திரசேகரம் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

### அறிவோர் ஒன்றுகூடல்

23.06.2010 அன்று நடைபெற்ற அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு ஆட்சிக் குழு உறுப்பினர் திருமதி சந்திரபவானி பரமசாமி அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. **"எம்மதமும் சம்மதமான செம்மொழி"** என்னும் தலைப்பில் திருமதி புலவர் பூரணம் ஏனாதிநாதன் அவர்கள் உரையாற்றினார். நல்லதோர் உரையாற்றிய பூரணம் அவர்கள் பல தகவல்களைக் கூறி தனது உரைக்கு மெருகூட்டினார்.

### அற்றைத்திங்கள்

25.06.2010 மாதந்தோறும் இடம்பெறும் அற்றைத் திங்கள் நிகழ்வில் முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மா.செ.மூக்கையா அவர்கள் உரை நிகழ்த்தினார். தகை சான்ற ஆளுமை படைத்த அவர், தான் பிறந்து வளர்ந்த பண்பாட்டுச் சூழல், ஆற்றிய பணிகள், அனுபவங்கள் பற்றிய ஒரு சிறந்த உரையை ஆற்றினார். கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி பேச்சாளர் பற்றிய நல்ல பல தகவல்களைக் கூறினார்.



### நூலகம் (சிறுவர் பகுதி)

26.06.2010 **"கதை கதையாம் காரியமாம்"** என்ற நிகழ்வில் திருமதி விஜிதா மதிதரன், செல்வி கல்பனா ஜீவரட்ணம் கலந்து கொண்டு சிறுவர்களுக்கான கருத்து மிக்க கதைகளைக் கூறி மகிழ்வித்தார்.

### ஆரோக்கிய வாழ்வுக்கான கலந்துரையாடல்

27.06.2010 மாதந்தோறும் நடைபெறும் ஆரோக்கிய வாழ்வுக்கான கலந்துரையாடல் நிகழ்வில் **"ஆரோக்கிய வாழ்வுக்கு நேர முக்கியத்துவத்தின் அவசியம்"** என்னும் பொருள் பற்றிக் கலந்துரையாடல் இடம் பெற்றது. தமிழ்ச் சங்க துணை நிதிச் செயலாளர் வைத்திய கலாநிதி சி.அனுஷ்யந்தன் அவர்கள் தலைமையேற்று நிகழ்ச்சியை சிறப்பாக நடாத்தி வைத்தார்.

வைத்திய கலாநிதிகள் நச்சினார்க்கினியன், தர்மேந்திரா, எஸ்.எஸ்.அருளானந்தம், ஜின்னாஹ் ஷரிபுத்தீன் மற்றும் சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு சிறப்பித்தனர். உளநல ஆலோசகர் திரு.கா.வைத்தீஸ்வரன் அவர்கள் இணைப்பாளராகவிருந்து நிகழ்ச்சிகளை சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

### அறிவோர் ஒன்றுகூடல்

30.062010 அன்று இடம்பெற்ற அறிவோர் ஒன்றுகூடலுக்கு நூலக செயலாளர் திரு.தி.ஞானசேகரன் அவர்கள் தலைமை தாங்கினார். கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.சந்திரசேகரன் சசிதரன் அவர்கள் திரு.சு.முத்துலிங்கம் அவர்களின் சிறுகதைத் தொகுதிபற்றிய ஒரு உரையை ஆற்றினார்.

அவர் தனது உரையில் திரு.முத்துலிங்கம் அவர்களின் **"எழுத்துப்பாணி, அவரது ஆளுமை, இலகு தமிழ் நடை, இயற்கை அழகு"** என்பன பற்றி விரிவாகக் கூறினார். அத்துடன் அவரது உரை திரு.முத்துலிங்கம் அவர் களது சிறுகதைகள் பற்றிய ஒரு விமர்சனம் போலவும் சிறப்பாக அமைந்திருந்தது. உரையை சபையோர் பாராட்டினார்.

## இலவச வைத்தியம்

இம்மாதம் 7ம், 21ம் திகதிகளில் வைத்திய கலாநிதி எஸ்.எஸ்.அருளானந்தம் அவர்களது இலவச வைத்திய பரிசோதனையும் மருந்துவழங்கலும் இடம்பெற்றன.

## பொதுக்கூட்ட அறிவித்தல்

*தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இம்மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும். அன்றைய தினம் 68ம் ஆண்டுக்கான செயலாளரின் ஆண்டறிக்கை, நிதிச்செயலாளரின் கணக்கறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாக ஆண்டுக்கான ஆட்சிக்குழு தெரிவு இடம்பெறும். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சகல அங்கத்தவர்களுக்குமான பதிவு காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.*



## நன்றி சொல்ல சில வரிகள்

கடந்த ஆட்சிக் காலப்பகுதியில் (2009/2010) தமிழ்ச்சங்க வெளியீடான 'செய்தி மடல்' தடையின்றி வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய தலைவர், செயலாளர், நிதிச்செயலாளர் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் உளங்கனிந்த நன்றிகள்.

'செய்தி மடல்' வடிவமைப்பு உயிர்பெற்றுவெளிவர உளப்பூர்வமான பங்களிப்பை வழங்கிய புத்தக விற்பனை நிலைய பொறுப்பாளர் செல்வி.சி.சத்தியஜோதி, உதவி நிர்வாக அலுவலர் செல்வி.கே.ஹேமலதா, அலுவலக உதவியாளர் திருமதி.சி.விமலநாதன் ஆகியோருக்கு அன்பு கலந்த நன்றிகள்.

செய்திமடல் உரிய வேளையில் வெளிவர மனமுவந்து உதவிய நிர்வாக அலுவலர் திரு.ஆர்.சிவராசா அவர்களுக்கும் புத்தக உருப்பெற தங்கள் ஒத்துழைப்புகளை நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இதயபூர்வமான நன்றிகள்.

**வாழ்க வளமுடன்.**

செய்திமடல் தொடர்பான மேலதிக தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**
**பொதுச்செயலாளர்**

வடிவமைப்பு: ப.க.மகாதேவா - ஆட்சிக்குழு உறுப்பினர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல.07, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.

## விவேகானந்தர் கொடுத்த உற்சாகம்

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் நீண்ட மலைப்பாதை வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது, மலைச்சரிவில், மேற்கொண்டு ஏறமுடியாமல் களைத்துப் போய் அமர்ந்திருந்தான் இளைஞன் ஒருவன். அவனைப் பார்த்ததும் அங்கே சென்றார் அவர்.

"சுவாமி! நான் மிகவும் சோர்ந்து போய்விட்டேன். இந்த பாதையை இனி எப்படி கடக்கப் போகிறேன்? இனிமேல் என்னால் நடக்க இயலாது. என் நெஞ்சே வெடித்துவிடும் போலிருக்கிறது" என்று விவேகானந்தரிடம் புலம்பினான் அந்த இளைஞன்.

அதற்கு அவர், 'இளைஞனே! சற்று கீழே பார். காலுக்கு கீழே நீண்டு தெரிகின்ற அந்தப் பாதை முழுவதும் உன்னால் கடக்கப்பட்டது தான். இன்னும் கொஞ்சம் நடந்தால் போதும். முன்னால் தெரிகின்ற பாதையும் விரைவில் உன் காலுக்கு கீழே வந்துவிடும்." என்றார்.

அவரது தெம்பூட்டுகின்ற இந்த வார்த்தைகளை கேட்டதும், சோர்ந்துபோய் இருந்த இளைஞன் துள்ளியெழுந்தான். நடக்க ஆரம்பித்தான். மலையின் உச்சியை அடைந்தான்.